2010 ஏப்ரல் 8]

சேவை செய்கின்றபோது மக்களுடைய வரிப் பணத்திலிருந்துதான் செய்ய வேண்டியிருக்கிறது.

இன்னும்கூட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொல்லி, அவருடைய பகுதியில் மட்டும் 10 புதிய வழித்தடங்களை நானே சென்று அமைத்துவிட்டு வந்தேன். அதுகூட நஷ்டத்தில்தான் இயங்குகின்றது. எனவேதான், உங்களுக்கு நல்ல பெயர் வருவதற்காக நாங்கள் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம், அதுதான் உண்மை. இப்போது ஒரு உறுதியை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தந்து, 3,000 புதிய பேருந்துகளைத் தந்திருக்கிறார்கள். இன்னும் 5,000 பேருந்துகளைத் தருவார்களேயானால், 100 சதவிகிதம் புதிய பேருந்துகள் வந்துவிடும். அதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேட்டிருக்கிறோம். விரைவில் அவர்களும் தருவதாக ஒப்புதல் தந்திருக்கிறார்கள்.

வெகுவிரைவில் நல்ல பேருந்துகளாக, மீண்டும் நீங்கள் தேர்தலுக்குச் செல்லுகின்றபோது உங்களுக்கு நல்ல பெயர் வருகின்றபடி இந்தத் துறை நிச்சயமாக நடக்கும்.

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

34—

சிகிச்சை வசதி

***61228—திரு. சு. குணசேகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை தொகுதி, காளையார்கோவில் ஒன்றியம், மறவமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள் நோயாளிகளுக்கான வசதிகளுடன் முழு நேர சிகிச்சை அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியின் அடிப்படையில் திருத்திய விடையைப் படிக்கின்றேன்:*

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில், மறவமங்கலம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 6 படுக்கைகள் வசதி கொண்ட 24 மணி நேர பிரசவ சேவை வழங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், திரு. சு. குணசேகரன்.*

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்குடி—இராமநாதபுரம் சாலையில் அமைந்திருக்கிற மறவமங்கலம் வளர்ந்து வரக்கூடிய ஒரு சிறு நகரமாகும். அந்த நகரத்தைச் சுற்றி கிட்டதட்ட 100—க்கும் மேற்பட்ட கிராமங்களில் இருக்கிற மக்கள் நாள்தோறும் மறவமங்கலத்திற்கு வந்து சென்று கொண்டிருக்கிறார்கள். அதைப்போல ஒரு நாளைக்கு 20,000—க்கும் மேற்பட்ட மக்கள் வந்து செல்கிற மறவமங்கலத்தில் இயங்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் 4 படுக்கைகளைக் கொண்ட ஓர் ஆரம்ப சுகாதார நிலையமாக இயங்கிக்கொண்டிருக்கிறது. அங்கே ஒரு மருத்துவர் பணியாற்றுகிறார். எனவே, இரவு நேரங்களில் அல்லது பகல் 12 மணிக்கு மேல், மருத்துவர்கள் இல்லாத ஒரு நிலை நீடிக்கிற சூழல் இருக்கிறது. மறவமங்கலத்தில் 30 படுக்கைகளைக் கொண்ட ஒரு துணை மருத்துவமனையை உருவாக்குவதன்மூலம் அந்தப் பகுதி மக்களுக்குச் சிறப்பாக மருத்துவ சேவை ஆற்ற முடியும் என்ற அடிப்படையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அங்கே 30 படுக்கைகளைக் கொண்ட ஒரு மருத்துவமனையை உருவாக்கித் தருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். அதேநேரத்தில், இன்றைக்கு சிவகங்கை தொகுதியில் இருக்கக்கூடிய, சிவகங்கை ஒன்றியம், மதகுபட்டி, அதைப்போல காளையார்கோவில் ஒன்றியத்தில் இருக்கக்கூடிய சாத்திரசிவம்பட்டி, சிலுக்கப்பட்டி போன்றவை முக்கியமான சாலையின் மையப்பகுதிகளில் இருக்கக்கூடிய சிறு நகரங்கள். அப்படிப்பட்ட நகரங்களில் ஏனோ கடந்த காலங்களிலிருந்து இதுவரை ஆரம்ப சுகாதார நிலையங்கள்*

2010 ஏப்ரல் 8]

அமைக்கப்படாத ஒரு சூழ்நிலை இருப்பதால், அந்த நகரங்களில் இருக்கக்கூடிய மக்களுக்கும், அன்றாடம் வந்து செல்கிற மக்களுக்கும் மருத்துவம் பார்க்க வேண்டுமென்று சொன்னால், அவர்கள் வேறொரு இடத்திற்குத் தனியாகப் பயணத்தை மேற்கொள்ள வேண்டிய ஒரு நிலை நீடிக்கிறது. எனவே, இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற கால வளர்ச்சிக்கேற்ப, மாறுதலுக்கேற்ப, வளர்ந்து வரக்கூடிய சாலையின் மையத்தில் அமைந்திருக்கிற இப்படிப்பட்ட நகரங்களில் மக்கள் நல்வாழ்வுத் துறை திட்டமிட்டு மருத்துவமனைகளை உருவாக்குவதற்கான நடவடிக்கையை எடுக்குமா? அந்த அடிப்படையில் மதகுபட்டி, சாத்திரசிவம்பட்டி மற்றும் சிலுக்கப்பட்டியிலும் 30 படுக்கைகளைக் கொண்ட ஆரம்ப சுகாதார மருத்துவ மையங்களை அமைத்துத் தருவார்களா என்று தங்களின் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறவமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையம் தற்பொழுது 6 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. 6 துணை சுகாதார நிலையங்கள் இதனது கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. இந்த ஆரம்ப சுகதார நிலையத்தில் அனுமதிக்கப்பட்ட மருத்துவர் உள்ளிட்ட 10 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேலும் இன்ஃபான்ட் வார்மர், இ.சி.ஜி உபகரணம், சக்ஷன் அப்பேரட்டஸ், எலக்ட்ரானிக் இரத்தமானி ஆகிய நவீன உபகரணங்கள் இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. அதேபோல இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, தொலைக்காட்சி வசதி செய்யப்பட்டுள்ளது. நோயாளிகள் காத்திருப்புக்கூடம் கட்டப்பட்டுள்ளது. மூலிகைத் தோட்ட வசதி செய்யப்பட்டுள்ளது. ஆரம்ப சுகாதார நிலையத்தில் சுற்றுப்புற பூச்சுவேலை செய்யப்பட்டுள்ளது. ஆரம்ப சுகாதார நிலையத்தில் மிகச் சிறந்த முறையில் நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மாதம் ஒன்றுக்கு சராசரி 10 முதல் 15 உள்நோயாளிகளும், நாளொன்றுக்கு சராசரியாக வெளிநோயாளிகள் 115 நபர்களும் சிகிச்சை பெற்று வருகின்றனர். எனவே, தேவையின் அடிப்படையில், நிதிநிலைக்கேற்ப, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறைக்கான மானியக் கோரிக்கை வரும் நேரத்தில் மறவமங்கலத்தில் 30 படுக்கைகளைக் கொண்ட ஒரு மருத்துவமனையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உருவாக்கித் தரவேண்டுமென்று தங்கள்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

சிவகங்கை அரசு தலைமை மருத்துவமனையில் இன்றைக்கு நிறைய மருத்துவர்களையெல்லாம் நியமித்திருந்தாலும், இன்னும் சிறப்பு மருத்துவர்கள் நியமிக்கப்படாத நிலை நீடிக்கிறது. எனவே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அங்குள்ள தலைமை மருத்துவமனையில் சிறப்பு மருத்துவர்களைக் குறைவில்லாமல் நியமிப்பதற்கான நடவடிக்கையை எடுப்பதோடு, அந்தத் தலைமை மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவை casualty பிரிவை உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், திடீரென்று இரவு நேரங்களில்...

முற்பகல் 10—15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. குணசேகரன், கேள்வியை short-ஆக முடியுங்கள். எவ்வளவு நேரமாகப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்?

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன். நோயாளிகள் எல்லாம் இரவு நேரத்தில் வருகின்றபோது அந்தத் தலைமை மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவு இல்லாத காரணத்தால்—ஏதாவது ஒரு மருத்துவர் இருக்கிறார்—அவர் வருகின்ற நோயாளியின் நோய்க்குச் சம்பந்தம் இல்லாத மருத்துவராக இருப்பதால்—நோயாளிகளுடைய குறைகளைப் போக்க முடியாத நிலையில் அங்கு பதற்றமான நிலையும் தொடர்ந்து ஏற்பட்டவண்ணம் இருக்கின்றது. அங்கு எப்போது பார்த்தாலும் பிரச்சினைக்குரிய ஒரு நிலை நீடிக்கின்ற காரணத்தினால், உடனடியாக அங்கு ஒரு casualty பிரிவை அமைத்துத் தருவதோடு, இந்த ஆண்டு அங்கு மருத்துவக் கல்லூரியைத் துவக்கித்தருவார்களா என்பதையும் தங்கள் மூலமாகக் கேட்டு, அமர்கிறேன்.

2010 ஏப்ரல் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய கொள்கைப்படி ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு அரசு ஆரம்ப சுகாதார நிலையம் என தகுதிவாய்ந்த அரசு ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக படிப்படியாகத் தரம் உயர்த்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஐந்தாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு இந்த நான்கு ஆண்டுகளில் 30–4–2007 ஆம் ஆண்டு அரசு ஆணை எண் 142–ன்படி 75 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கைகள் கொண்டவையாகத் தரம் உயர்த்தப்பட்டன. அதுபோல் 12–11–2008 ஆம் ஆண்டு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அரசு ஆணை எண் 378–ல் 50 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கைகள் கொண்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களாகத் தரம் உயர்த்தப்பட்டன. மேலும், தனியார் நிறுவனங்கள் ஒத்துழைப்புடன் மேடவாக்கம், செம்மஞ்சேரி ஆகிய இரண்டு இடங்களிலும் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும் தரம் உயர்த்தப்பட்டன. ஆக மொத்தம் 1,539 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இதுவரையில் 257 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கை வசதி கொண்ட அரசு மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. இதனைத் தொடர்ந்து வருங்காலங்களில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையும் பரிசீலிக்கப்படும்.

அதுபோல், சிவகங்கை அரசு தலைமை மருத்துவமனையில் போதிய மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அதுபோல, அவசர சிகிச்சை மையம் 24 மணி நேரமும் செயல்படுவதற்கு அங்கு மருத்துவர்கள் பணியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அதுபோல், வருகின்ற ஆண்டு சிவகங்கையில் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக்குக் கட்டடங்கள் கட்டி அதற்கு அடுத்த ஆண்டு அங்கு புதிய மருத்துவக் கல்லூரி துவக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே தற்போது கட்டடக் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்கிற செய்தியையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன்.

[2010 ஏப்ரல் 8

திரு. அ. சௌந்திரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் மக்கள் உடல்நிலை சரியில்லை என்று சொன்னால் சுமார் 160 கிலோ மீட்டர் கூடலூரில் இருந்து கோவைக்கும், 100 கிலோ மீட்டர் உதகையிலிருந்து கோவைக்கும், அந்தப் பகுதியில் உள்ள மலையில் பயணம் செய்யவேண்டிய அவல நிலையில் இருக்கிறார்கள். இம்மாவட்ட மக்களின் உடல்நிலையைக் கருத்தில் கொண்டு, M.R.I. Scan மற்றும் C.T. Scan எடுக்க வேண்டியுள்ளதாலும், மேலும் நீலகிரி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் இதுபோன்ற வசதிகள் இல்லாததாலும், C.T. Scan பழுதடைந்த நிலையில் இருப்பதாலும், மேலும் M.R.I. Scan இதுவரை நிறுவப்படவில்லை என்கின்ற காரணத்தினாலும், மலை மாவட்ட மக்களின் வசதியைக் கருத்தில் கொண்டு M.R.I. Scan மற்றும் C.T. Scan உடனடியாக அந்த அரசு தலைமை மருத்துவமனையில் அமைத்துத்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மகளிர் மட்டும் சிகிச்சை பெற்றுவரும் உதகை சேட்டு ஆஸ்பத்திரி என்கின்ற உதகை மருத்துவமனையில் சுமார் 6 பெண் மருத்துவர்கள் இருக்க வேண்டிய மருத்துவமனையில், மருத்துவர்கள் பணி நியமனம் செய்யப்பட்டும் இன்னும் அங்கு மருத்துவர்கள் பணிக்கு வராத காரணத்தால் அங்கு மக்கள் பெரும் அவதிக்குள்ளாகின்ற காரணத்தினாலும், அந்த மருத்துவமனைக்குக் கூடுதலாக பெண் மருத்துவர்களை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் கோவையிலிருந்து தற்போது deputation-னில் வருகின்ற மருத்துவர்களும் அவ்வப்போது விடுமுறையில் சென்றுவிடுகின்ற காரணத்தினால் மக்கள் பெரும் அவதிக்குள்ளாகின்றார்கள். ஆகவே, குன்னூர், கோத்தகிரி போன்ற மருத்துவமனைகளில் இருக்கின்ற ஒரு மருத்துவரையும் அங்கு deputation-இல் எடுத்துச் செல்வதால் மக்கள் பெரிதும் சிரமப்படுகின்ற காரணத்தினால், நீலகிரி மாவட்ட மக்களின் மன நிலை பாதிக்கப்படுவதோடு மருத்துவர்களினால் மன உளைச்சலுக்கும் ஆளாகின்ற காரணத்தினால் அங்கு ஒரு மருத்துவக் கல்லூரி இருந்தால்தான் நிரந்தரத் தீர்வு ஏற்படும் என்கிறார்கள். இதனை வரும் நிதியாண்டிலோ அல்லது எதிர்காலத்திலோ அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, இடைப்பட்ட காலத்தில் இவற்றை நிவர்த்தி செய்வதற்கு மருத்துவத் துறையின் மேற்படிப்புக்கு P.G. Course வழங்கினால் . . .

2010 ஏப்ரல் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சௌந்திரபாண்டியன், கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. அ. சௌந்திரபாண்டியன்: அங்கே மருத்துவர்களின் ஆலோசனை இருக்கின்ற காரணத்தினால், இடைப்பட்ட காலத்தில் இதுபோன்று நியமனம் செய்து அம்மக்களின் மன நிலையையும், நோயினையும் போக்குவதற்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—20

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் அரசு பொறுப்பேற்கின்ற சமயத்தில் நீலகிரி மாவட்டத்தில் பெரும்பான்மையான மருத்துவமனைகளில் மருத்துவர்களே இல்லாமல் பணிகள் நடந்த காட்சிகள் ஒரு காலத்தில் உண்டு. ஆனால், இப்பொழுது இந்த நான்கு ஆண்டு காலங்களில் நீலகிரி மாவட்டத்திற்குரிய போதிய மருத்துவர்கள் எல்லாம் பணி நியமனம் செய்யப்பட்டு, அங்கே மக்களெல்லாம் பாராட்டுகின்ற வகையில் உள்ளது. சில மருத்துவமனைகளில் பெண் மருத்துவர்கள் இல்லையென்ற குறைபாடு இருந்தது. ஏனென்றால், நீலகிரி மாவட்டத்திற்கு அதிகமாக பெண் மருத்துவர்கள் செல்வதற்குத் தயங்குகிறார்கள். இருந்தாலும், கோயம்புத்தூர் மருத்துவமனையிலிருந்து deputation அடிப்படையில் அங்கே மருத்துவர்கள் பணி அமர்த்தப்பட்டு, தேவையான சிகிச்சை வசதி அளிக்கப்பட்டு வருகிறது.

மேலும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாவட்டந்தோறும் M.R.I. Scan அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அது படிப்படியாக பல மாவட்டங்களில் இப்பொழுது நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதேபோல, நீலகிரி மாவட்டத்திலும் கண்டிப்பாக வருங்காலங்களில் M.R.I. Scan அமைப்பதற்குரிய சூழ்நிலை உருவாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.